# தொல்லியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2017–2018

## முன்னுரை

1. தொல்லியல் என்பது பண்டைய மனிதனின் பண்பாடு மற்றும் வாழ்ந்ததற்கு அடையாளமாக விட்டுச் சென்ற பொருட்களைக் கொண்டு அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்வதாகும். பண்டையக் காலத்தில் மனித இனம் எவ்வகையில் சுற்றுச் சூழலுடன் இணைந்திருந்தது என்பதை உணர்வதும், நிகழ்காலத்தின் வரலாற்றினை பாதுகாத்து எதிர்காலத்திற்கு கற்றுக் கொடுப்பதும் தொல்லியலின் நோக்கமாகும். பண்பாட்டினை ஆராய்வது என்பது தொல்பொருட்களை ஆய்வு செய்தல், அவை எத்தகைய பொருட்களால் உருவாக்கப்பட்டது, எதற்காக பயன்படுத்தப்பட்டது அல்லது எவ்வகையில் மனிதனால் அவை மாற்றம் பெற்றன ஆகியவற்றை உள்ளடக்கியது. நாம்

எங்கிருந்தோம் என்பதை கண்டுபிடித்து நாம் யாராக இருந்தோம் என்பதை தெரிந்துகொள்ளும் கடந்த காலத்தை நோக்கிய ஒரு பயணம் என்றும் இதைக் குறிப்பிடலாம். விரிவாக பார்க்கையில், தொல்லியல் என்பது ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல்வேறு துறைகள் குறித்த ஆய்வு. நமது முன்னோர்கள் விட்டுச் சென்ற தொல்லியல் எச்சங்கள் பற்றிய ஆய்வே தொல்லியல் ஆகும்.

**துறையின் நோக்கம்**

**1.1** பழங்கால நினைவுச் சின்னங்களை பாதுகாக்கும் பொருட்டும், தொல்பொருட்களை அகழாய்வின் மூலம் வெளிக்கொணரும் பொருட்டும், தமிழ்நாடு அரசால் **1961**–ஆம் ஆண்டு தொல்லியல் துறை தொடங்கப்பட்டது. கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து, நூலாக்கம் செய்தல், அகழ்ந்தெடுத்த தொல்பொருட்களைக் கொண்டு அதே இடத்தில் அகழ்வைப்பகம் அமைத்தல், தொல்பொருட்களை இரசாயன முறையில் சுத்தம் செய்தல் என அதன் செயல்பாடுகள் இதில் அடங்கும். ஆய்வாளர்கள் மற்றும்

துறை பணியாளர்களின் பயன்பாட்டிற்கென சென்னை ஆணையரகத்தில் மதிப்புமிக்க, அரிய, தனித்தன்மை வாய்ந்த நூல்களுடன், அதற்கேயுரிய நூலகம் ஒன்று இயங்கி வருகிறது.

**நிர்வாக அமைப்பு**

**1.2** தொல்லியல் துறை ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் துணை இயக்குநர், தொல்லியல் துணை கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர், உதவி செயற்பொறியாளர், மண்டல உதவி இயக்குநர், காப்பாட்சியர், கல்வெட்டாய்வாளர், தொல்லியல் அலுவலர், வரலாற்றுக்கு முந்தைய கால அகழாய்வாளர் மற்றும் அகழாய்வாளர் உதவியுடன் தொல்லியல் துறை இயங்கி வருகின்றது.

**நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல்**

**1.3** இதுவரை, சமயஞ் சார்ந்த மற்றும் சமயஞ்சாரா கட்டடங்கள் உட்பட **90** புராதன மற்றும் வரலாற்றுச் சின்னங்கள், பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக, மாநில அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. சமீபத்தில், **2016–2017** ஆம் ஆண்டு,

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், வல்லம் கிராமத்தில் உள்ள 'கரிவரதராஜ பெருமாள் குடைவரைக் கோயில், சிவன் குடைவரைக் கோயில், வேதாந்தீஸ்வரர் குடைவரைக் கோயில்' ஆகியன புதிதாக பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இது தவிர, தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்டச் சின்னமாக அறிவிக்க ஏதுவாக புதிதாக 21 வரலாற்றுச் சின்னங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

**இந்து சமய அறநிலையங்கள் துறை பொறியாளர்களுக்கான 'புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு' என்னும் குறுகிய கால ஆறு வார காலப் பயிற்சி**

1.4 நாட்டில் முதல்முறையாக, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் இந்து சமய அறநிலையங்கள் துறையின் 44 பொறியாளர்களுக்கு 'புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு' என்னும் குறுகிய கால ஆறு வார காலப் பயிற்சி 2 அணிகளாக 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.24 இலட்சம் மதிப்பில் நடத்தப்பட்டது.

அதேபோன்று, **2015–2016** ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையத் துறையின் **40** பொறியாளர்கள் மற்றும் ஸ்தபதிகளுக்கு ரூ.**25** இலட்சம் மதிப்பீட்டில் 'புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு' பயிற்சி **6** வார காலத்திற்கு நடத்த ரூ.**25** இலட்சம் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இப்பயிற்சிகள் பொறியாளர்களுக்கு தொல்லியல் நெறிமுறைகளுக்கு உட்பட்டு பழங்கால கோயில்களைப் பாதுகாத்தல் மற்றும் புனரமைப்பு பணிகள் செய்வதற்கு மிகுந்த உதவியாக அமைந்தன.

இதன் தொடர்ச்சியாக, **2015–2016** ஆம் ஆண்டிற்கு, இந்து சமய அறநிலையத் துறையில் பணியாற்றும் **75** செயல் அலுவலர்களுக்கு, மூன்று அணிகளாக "புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு" பயிற்சி **2** வார காலத்திற்கு **08.09.2016** முதல் **19.10.2016** வரை நடத்த ரூ.**20** இலட்சம் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இப்பயிற்சி, இந்து சமய அறநிலையத் துறையின் கோயில் கட்டடங்கள், ஓவியங்களை பாதுகாத்தல் மற்றும் பழமையான

கோயில்களின் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு பணிகளில் தினசரி நடவடிக்கைகளில் நேரடி தொடர்பு கொண்டுள்ள செயல்அலுவலர்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமைந்தது.

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு**

**1.5** வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளுதல் இத்துறையின் முதன்மைப் பணியாகும். இதுவரை, வரலாற்று முக்கியத்துவமிக்க **39** இடங்களில், அகழாய்வுப் பணி மேற்கொண்டு, அவற்றில் **36** இடங்களின் அகழாய்வு அறிக்கைகள், நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் தொல்லியல் அகழாய்வு மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ், **2015–2016** ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் என்னும் இடத்தில் ரூ.**10** இலட்சம் செலவில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நிறைவடைந்துள்ளன. அகழாய்வு பணிகளை ஆவணம் செய்தல் மற்றும் அகழாய்வு அறிக்கை தயாரிக்கும் பணிகள்

முடிவடையும் தருவாயில் உள்ளன. இவ்வகழாய்வின் மூலம் பண்டைய தமிழகத்தின் அரசியல், சமுதாயப் பண்பாட்டுச் சிறப்புகள் ஆகியன வெளிக்கொணரப்பட்டுள்ளன. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பட்டறைப்பெரும்புதூர் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற அரிய தொல்பொருட்கள் பட்டறைப்பெரும்புதூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் **04.07.2016** அன்று காட்சிப்படுத்தப்பட்டன. இக்கண்காட்சியானது மாணவர்கள், அறிஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றது.

**2016 – 2017** ஆம் ஆண்டில், மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், சட்டப் பேரவை விதி **110**–ன் கீழ், இராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளம் என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் தமிழகத்தின் பண்டைய அரசியல், சமூக–பண்பாடு, கடல்வழி வணிகத் தொடர்புகள் மற்றும் இந்த வரலாற்று இடத்தின் முக்கியத்துவம் ஆகியவற்றினை வெளிப்படுத்தும் நோக்கத்தில்

ரூ.55 இலட்சம் மதிப்பில் ஒரு பெரிய அளவில் அகழாய்வு மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கான முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தொல்லியல் அகழ்வைப்பகங்கள்**

**1.6** கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளில் கிடைக்கும் அரிய தொல்பொருட்களை, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், இத்துறையின் கீழ் செயல்படும் 14 அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் பார்வைக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | அகழ்வைப்பகங்கள் | இடம் / மாவட்டம் |
|---|---|---|
| 1) | தேனிசு கோட்டை அகழ்வைப்பகம் | தரங்கம்பாடி / நாகப்பட்டினம் |
| 2) | ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம், | பூம்புகார் / நாகப்பட்டினம் |
| 3) | கங்கைகொண்டசோழபுரம் அகழ்வைப்பகம் | கங்கைகொண்ட சோழபுரம் / அரியலூர் |

| வ. எண் | அகழ்வைப்பகங்கள் | இடம் / மாவட்டம் |
|---|---|---|
| 4) | இராமலிங்க விலாசம் அகழ்வைப்பகம் | இராமநாதபுரம் / இராமநாதபுரம் |
| 5) | ஆற்காடு அகழ்வைப்பகம் | ஆற்காடு / வேலூர் |
| 6) | வரலாற்று முந்தைய கால அகழ்வைப்பகம் | பூண்டி / திருவள்ளூர் |
| 7) | திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் | மதுரை / மதுரை |
| 8) | இராசராசன் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 9) | மராட்டா அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 10) | கரூர் அகழ்வைப்பகம் | கரூர் / கரூர் |
| 11) | கோயம்புத்தூர் அகழ்வைப்பகம் | கோயம்புத்தூர் / கோயம்புத்தூர் |
| 12) | குற்றாலம் அகழ்வைப்பகம் | குற்றாலம் / திருநெல்வேலி |
| 13) | திருக்கோவிலூர் அகழ்வைப்பகம் | திருக்கோவிலூர் / விழுப்புரம் |
| 14) | தருமபுரி அகழ்வைப்பகம் | தருமபுரி / தருமபுரி |

**கல்வெட்டியல்**

1.7 தொல்லியல் துறை, கல்வெட்டுகளைப் படியெடுத்து, பொருள் கண்டுணர்ந்து, படித்து, தொகுத்து மற்றும் பதிப்பித்து நூலாக வெளியிடும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகின்றது. தற்போது தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில், 29 மாவட்டங்களில் உள்ள 24,454 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு இத்துறையில் உள்ளன. இதர மாவட்டங்களான புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் தூத்துக்குடியில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 14,000 கல்வெட்டுகள், துறை கல்வெட்டாய்வாளர்களால் பொருள் கண்டுணர்ந்து படிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 6,827 கல்வெட்டுகள் 47 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

சென்னை ஆணையர் அலுவலகத்தில் இயங்கி வரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில், 1974– ஆம் ஆண்டு முதல் ‘கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்’ என்னும் ஓராண்டு முதுநிலைப் பட்டய வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், முதுகலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்கள்

சேர்க்கப்பட்டு, கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை, 219 மாணவர்கள் இப்படிப்பினை நிறைவு செய்துள்ளனர். மேலும், ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 2,000/– பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**வெளியீடுகள்**

1.8 இத்துறையின் புதுப்பிக்கப்பட்ட அச்சுப் பிரிவின் வாயிலாக தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள், வரலாற்றுச் சின்னங்கள், அகழாய்வு அறிக்கைகள், மாவட்டத் தொல்லியல் கையேடுகள், அகழ்வைப்பகக் கையேடுகள் மற்றும் கோயில் ஆய்வு நூல்கள் ஆகியவை தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. இத்துறை இதுவரை 285 நூல்களை வெளியிட்டுள்ளது. 'கல்வெட்டு' காலாண்டு இதழ் ஒன்றும் வெளியிடப்படுகிறது. இதுவரை 100 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை, 250 துறை வெளியீடுகள், இத்துறையின் www.tnarch.gov.in எனும் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

**வேதியியல் பாதுகாப்பு**

**1.9** அகழாய்வின் மூலம் வெளிக்கொணர்கின்ற தொல் பொருட்களை வேதியியல் முறையில் பாதுகாப்பதற்காக வேதியியல் பிரிவுகள் சென்னை மற்றும் மதுரையில் உருவாக்கப்பட்டன. பின்னர், அதன் பணி **14** அகழ்வைப்பகங்களில் உள்ள தொல்பொருட்களை பாதுகாத்தலுக்காகவும் மற்றும் பாதுகாப்பு பிரிவுடன் இணைந்து **90** பாதுகாக்கப்பட்ட சின்னங்களை இரசாயனப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வதற்காகவும் விரிவாக்கப்பட்டது.

**அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்**

**1.10** அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம், **1869** –ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் செயல்பட்டு வந்த இந்நூலகம் இடமாற்றம் செய்யப்பட்டு, தற்போது சென்னை

கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக கட்டடத்தின் 7–வது தளத்தில் இயங்கி வருகின்றது. இந்நூலகத்தில் கணிதம், வானசாஸ்திரம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகள் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அராபி மற்றும் பாரசீக மொழிகளில் 72,748 அரிய தாள் மற்றும் ஓலைச் சுவடிகள் மற்றும் 25,373 மேற்கோள் நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**ஓலைச்சுவடிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வலைதளத்தில் மின்–வெளியீடாக வெளியிடுதல்**

**1.11** இதுவரை ஓலைச்சுவடிகள் மற்றும் தாட்சுவடிகளின் 2400 கட்டுகளின் 3,00,000 பக்கங்கள் தொல்லியல் துறையின் வலைதளத்தில் www.tnarch.gov.in வெளியிடப்பட்டுள்ளன. வலைதளத்தில் உள்ள இத்தகவல்கள் உலகில் உள்ள அனைத்து ஆய்வறிஞர்கள் மற்றும் இதர வாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.

**சுவடிகள் வள ஆதார மையம் (Manuscripts Resource Centre)**

**1.12** புதுடெல்லியிலுள்ள மத்திய பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய சுவடிக் குழுமம் [National Mission for Manuscripts (NMM)] இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச்சுவடிகளின் விவரங்களை திரட்டத் திட்டமிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள ஓலைச்சுவடிகளைச் சேகரித்து, அதன் விவரங்களை குறுந்தகடுகளில் எண்ணிலக்கம் செய்யும் பணிக்காக, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை, தமிழகத்தின் சுவடிகள் வள ஆதார (MRC) மையமாக அங்கீகரித்துள்ளது. இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை **58,000** சுவடிகள் எண்ணிலக்கம் செய்யப்பட்டு புதுடெல்லியிலுள்ள தேசிய சுவடிகள் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. பண்டைய தமிழர்களின்

பண்பாடு மற்றும் வானவியல் போன்ற விவரங்கள் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

**முக்கிய செயல்பாடுகள் – 2016–2017**

**1.13** சென்னை தொல்லியல் துறை கூட்ட அரங்கில், ‘‘கல்வெட்டுகளில் சமூக வரலாற்றுத் தரவுகள்’’, ‘‘பண்டைத் தமிழ்ச் சமூகம்’’, ‘‘பல்லவர் கால மரபுச் சின்னங்கள்’’, ‘‘காஞ்சிபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அண்மைக் கால தொல்லியல் அகழாய்வுகள்’’, ‘‘நடுகற்கள்’’, ‘‘அகழாய்வில் கள ஆய்வின் முக்கியத்துவம்’’ ஆகிய தலைப்புகளில் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன.

தொல்லியல் துறை மற்றும் சென்னை 2000 பிளஸ் அறக்கட்டளையுடன் இணைந்து ‘‘சென்னை வட்டாரத்தின் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல்’’, என்னுந் தலைப்பில் ஐந்து நாள் கருந்தரங்கம் 20.09.2016 முதல் 24.09.2016 வரை நடத்தப்பட்டு ஆறு தலைப்புகளில் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

உலக மரபு வார விழா **19.11.2016** முதல் **25.11.2016** வரை இத்துறையால் நடத்தப்பட்டது. உலக மரபு வார விழாவினை முன்னிட்டு, துறையின் வரலாற்றுச் சின்னங்களான மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம், தஞ்சாவூர் மாவட்டம் சரபேந்திரராசப்பட்டினம் மனோரா நினைவுச் சின்னம், நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி கோட்டை ஆகிய வரலாற்றுச் சின்னங்களில், பார்வையாளர்கள் இந்நாட்களில் இலவசமாக அனுமதிக்கப்பட்டனர். ஏறத்தாழ **15,000** பார்வையாளர்கள் பயன்பெற்றனர். மேலும், தொல்லியல் துறையின் **14** அகழ்வைப்பகங்களின் அலுவலர்களின் மூலமாக மாணவர்களுக்கு வினாடி வினா போட்டி, ஓவியப் போட்டி, கல்வெட்டுகளை படியெடுத்தல் மற்றும் பொருள் கண்டுணர்ந்து படித்தல் குறித்த பயிற்சி, சொற்பொழிவுகள், வேதியியல் முறைப்படி தொல்பொருட்களை பாதுகாக்கப் பயிற்சி, தொல்லியல் வகுப்புகள், மரபுச் சின்னங்களை என்.சி.சி மாணவர்களை கொண்டு சுத்தம் செய்தல், வரலாற்றுச்

சின்னங்களுக்கு அழைத்துச் சென்று விளக்கம் அளித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம் 2016–2017** (TANII)

**1.14** தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ், (Tamil Nadu Innovative and Initiative Scheme) தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதிகள் –IX, X, XI & XII வெளியிட மற்றும் இரண்டு கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கிட ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. தற்போது நூல்கள் அச்சிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**முடிவுரை**

**1.15** தொல்லியல், களாய்வு மற்றும் அகழாய்வில் கண்டெடுக்கப்படுகின்ற ஆதார சான்றுகளைக் கொண்டு ஒரு பகுதியின் மரபினை வெளிப்படுத்துகின்ற பல்துறை அறிவியலாகும். மேலும், தொல்லியல் சான்றுகள் ஒரு பகுதியின் வரலாறு மற்றும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை மீள் கட்டமைப்பு செய்ய உதவுகிறது. அகழாய்வில்

கண்டெடுக்கப்படுகின்ற அரிய தொல்பொருட்கள், பண்டைய தமிழ்நாடு, பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற கடல் வாணிகம் மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றத்தை எடுத்துரைக்கின்றன. இது தவிர, தொல்லியல் சின்னங்கள் முன்னோர்களின் கலை, உயரிய கட்டடக்கலை மற்றும் கட்டுமான திறமை போன்றவற்றை பிரதிபலிக்கின்றன. தமிழ்நாட்டின் மரபினை பாதுகாக்கும் நோக்கத்தில், தொல்லியல் துறை, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, பண்டைய தமிழ்நாட்டில் நிலவிய அரசியல், சமூக, மற்றும் பண்பாட்டு நிலைகளை வெளிப்படுத்தும் சீரிய பணியினை நடைமுறைபடுத்தி வருகிறது.

## அருங்காட்சியகங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2017–2018

**முன்னுரை**

**2.** அருங்காட்சியகம் என்பது வரலாறு மற்றும் இயற்கை அறிவியல் சார்ந்த சுட்டுப்பொருட்கள் மற்றும் அரும்பொருட்களை சேகரித்து, வரும் தலைமுறையினருக்கு, பாதுகாத்து, வழங்கும் ஒரு நிறுவனம் ஆகும். தொடக்கக்கால அருங்காட்சியகங்கள் பெரும் தனவந்தர்களின் தனித்த சேகரிப்புகள், தனியார் குடும்ப அல்லது நிறுவனங்களின் கலை மற்றும் அரும்பொருள்களின் சேகரிப்புகளைக் கொண்டு தொடங்கப்பட்டன. அருங்காட்சியகத்தினை “மனித குலம் மற்றும் அதன் சூழலியல் சார்ந்த பாரம்பரியம் மிக்க தொட்டுணரும் மற்றும் தொட்டுணரவியலாத அரும்பொருட்களை சேகரித்து, பாதுகாத்து, ஆய்வுகள் மேற்கொண்டு கல்வி, ஆய்வு, துய்த்தல் நோக்கத்திற்காக காட்சியமைப்பு வழியே செய்திப் பரிமாற்றம் செய்கின்ற சமுதாய

வளர்ச்சிக்கான நிலையான நிறுவனம்” என வரையறை செய்யலாம்.

**துறையின் நோக்கம்**

**2.1** காட்சிப்பொருட்களை, நிலையான காட்சிக்கூடங்கள், கருத்தியல் சார்ந்த சிறப்புக் கண்காட்சிகள் வாயிலாக பொதுமக்கள் கண்டு பயன்பெரும் வகையில் அருங்காட்சியகங்கள் செயல்படுகின்றன. தனது சேகரிப்புகள் வழியே சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் முறைசாராக் கல்வியினை வழங்கி வருகின்றன. அருங்காட்சியகங்கள், சான்றாதார செயல்பாடு மற்றும் காட்சியமைப்பு வழியே மாணவர்களுக்கு ஆய்வுத் தரவுகளை வழங்குகின்றன. நவீனயுகத்திற்கான பொழுது போக்கு வழியிலான கற்றல் மற்றும் தகவல் வழியிலான கற்றல் ஆகியன தகவல் தொழில்நுட்பம் மூலமாக பார்வையாளர்களை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்கின்றன. அருங்காட்சியக சுட்டுப்பொருட்கள் பாமரர் முதல் பண்டிதர் வரையிலான அனைத்து தரப்பினருக்கும் ஏற்றவகையில் பல்வேறு

பரிமாணங்களில் விளக்கங்களுடன் வழங்குகின்றன. அருங்காட்சியகங்கள் துறை மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைய அயராது பாடுபட்டு வருகின்றது.

**நிர்வாக அமைப்பு**

**2.2** அருங்காட்சியகங்கள் துறையின் கீழ், சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் **20** மாவட்ட அருங்காட்சியகங்களும், இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் உதவி இயக்குநர் (தொழில்நுட்பம்), காப்பாட்சியர்கள், உதவிக் காப்பாட்சியர்கள், காட்சிக் கூட விளக்குநர்கள், தொழில்நுட்ப உதவியாளர்களின் உதவியுடன் இயங்கி வருகிறது.

**அரசு அருங்காட்சியகம், சென்னை**

**2.3** **கி.பி.1851** ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை, அரசு அருங்காட்சியகம் இந்தியாவிலேயே இரண்டாவது பழமையான அருங்காட்சியகம் ஆகும். சென்னை நகரின் மையப்பகுதியில் ஆறு தனிக்கட்டடங்களாகிய மூன்று பாரம்பரிய கட்டடங்கள் மற்றும்

மூன்று நவீனகட்டடங்களுடன் அமையப்பெற்று, கலை, தொல்லியல், நாணயவியல், மானுடவியல், நிலத்தியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் சிறுவர் அருங்காட்சியகம் ஆகியவற்றை சார்ந்த **54** காட்சிக்கூடங்களை கொண்டுள்ளது**.** இது **16.25** ஏக்கர் நிலப்பரப்பில் பரவியுள்ளது**.** இப்பிரிவுகள் தவிர கல்வி, வடிவமைப்பு மற்றும் வேதியியப் பாதுகாப்புப் பிரிவுகள் பொதுமக்களின் சேவைக்காக இயங்கி வருகின்றன**.** உலகப்புகழ் வாய்ந்த தென்னிந்திய படிமங்கள், அமராவதி சுண்ணாம்பு கற்சிற்பங்கள், ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால சேகரிப்புகள், இந்திய நாணயங்கள், நீலத்திமிங்கிலத்தின் எலும்புக்கூடு, இராஜா ரவி வர்மாவின் ஓவியங்கள், இன்ன பிறவும் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் நன்கறியப்பெற்ற சேகரிப்புகளாகும்**.** சிறுவர் அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள முப்பரிமாண அரங்கு, ஊடாடக்கூடிய காட்சியமைப்புகள், டிரனோசரஸ் ரெக்ஸ் என்ற பண்டைய ஊர்வன விலங்கின் இயங்கு மாதிரி மற்றும் டீரோடேக்டைலஸ் என்ற பண்டைய அற்றுப்போன பறக்கும் ஊர்வன விலங்கின் இயங்குமாதிரி ஆகியனவும்,

அருங்காட்சியக காட்சி உலா பேருந்தும் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் அண்மைக்கால சேகரிப்பு மற்றும் கூடுதல் ஈர்ப்புகளாகும்.

**மாவட்ட அருங்காட்சியகங்கள்**

**2.4** சென்னையிலுள்ள தலைமை அருங்காட்சியகம் தவிர புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய **20** மாவட்டங்களில் அரசு அருங்காட்சியகங்கள் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகங்கள் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

**2016–2017 ஆம் ஆண்டில் அருங்காட்சியகத் துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்கள்**

**2.5 (1)** மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-ன் கீழ், **2016–17** ஆம் ஆண்டில் சென்னை

அரசு அருங்காட்சியகத்தில் ரூ. 10 கோடி செலவில் காட்சியமைப்பை மேம்படுத்தவும், பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தவும், உட்புற சாலைகள் மற்றும் நடைபாதைகள் அமைக்கவும், வளாகத்தின் அனைத்து பகுதிகளிலும் தோட்டங்கள் புல்வெளிகளை மேம்படுத்தவும் அருங்காட்சியகத்திற்கு ஏற்ற நுழைவுவாயில் அமைக்கவும் அறிவித்தார்கள். இதற்கான நிதி ஒதுக்கீட்டை ஆசிய வளர்ச்சி வங்கியின் – தமிழ்நாடு சுற்றுலாத் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம் – தொகுதி IV ன் கீழ் பெற கருத்துரு ஏற்கப்பட்டு விரிவான திட்டக் கருத்துரு திட்ட மேலாண்மை குழு வல்லுநர்களால் உருவாக்கப்பட்டு வருகிறது.

(2) மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2016–17 ஆம் ஆண்டில் சென்னை அரசு அருங்காட்சியகத்திலும் மற்றும் 20 மாவட்ட அரசு அருங்காட்சியகங்களிலும் தீத்தடுப்பு எச்சரிக்கை கருவிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை ரூ. 1.20 கோடி செலவில் அமைத்திடவும் அறிவித்தார்கள். இதற்கான நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டு, இப்பணிகள் திருவாளர்கள் எல்காட் நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**அறிவிப்புகள் – 2016 – 17**

**2.6 (1)** படிமக்கூடத்தில் காலியாக உள்ள கூடங்களில் புதிய காட்சிப் பெட்டிகள் அமைத்து இருப்பில் உள்ள படிமங்களை காட்சியில் வைக்க ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

**(2)** சேமிப்பில் உள்ள அமராவதி சிற்பங்களை தற்போதுள்ள சென்னை அரசு அருங்காட்சியகத்தின் முதன்மை கட்டடத்தில் ஏற்கனவே உள்ள அமராவதி காட்சிக்கூடத்திற்கு அடுத்து தொடர்ந்து அமைந்துள்ள காலியான கூடங்களில் காட்சிப்படுத்த ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

**(3)** சென்னை அரசு அருங்காட்சியகத்தின் முதன்மைக் கட்டட நீட்சிக் கூட விலங்கியல் பிரிவில்

சேகரிப்பில் உள்ள பறவைகள், பாலூட்டிகளின் எலும்புக் கூடுகள் மற்றும் சேமிப்பில் உள்ள ஈரப் பதப்படுத்தப்பட்ட விலங்கின உயிரிகள் காட்சிப்படுத்த ரூ.30 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

**அரும்பொருட்களின் புதிய சேர்க்கைகள்**

**2.7** அருங்காட்சியகத் துறையின் இயக்குநர் அவர்கள் மாநிலத்தின் புதைபொருள் அலுவலராக இருப்பதினால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் புதைபொருட்களாக கண்டெடுக்கப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள், நாணயவியல் சேகரிப்புகள், வெண்கல படிமங்கள் மற்றும் கற்சிலைகளை பெறுவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. **2016–2017** ஆம் நிதியாண்டில் மட்டும் **5** மாவட்டங்களிலிருந்து **674** கிராம் தங்க ஆபரணங்கள், **389** தென்னிந்தியப் பண தங்க நாணயங்களுடன் **792** இதர நாணயங்கள், **58** படிமங்கள் மற்றும் பூஜை உபகரணங்கள் புதை பொருட்களாகப் பெறப்பட்டன. இவை தவிர ஆடை

அலங்கார பொம்மைகள் மற்றும் ஓவிய கலைப்பொருட்கள் கொடையாகப் பெறப்பட்டு சேகரிப்பில் சேர்க்கப்பட்டன.

**உருவாக்கப்பட்ட மற்றும் செயலாக்கத்திற்கு வந்த திட்டக் கருத்துருக்கள்**

**2.8** முதன் முறையாக பெருநிறுவன சமூக பொறுப்பு (சி.எஸ்.ஆர்) நடவடிக்கையின் கீழ் திட்டக்கருத்துரு உருவாக்கி, பாங்க் ஆப் டோக்கியோ, சென்னை கிளை மூலம், ரூ.50 இலட்சம் 5.2.2017 அன்று பெறப்பட்டு சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தினை செயல்படுத்த 50,000 லிட்டர்கள் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கீழ்நிலை நீர் தேக்கத் தொட்டிகளை அமைத்து பகிர்வு செய்வதற்கான இணைப்பு குழாய்களை அமைக்க பொதுப்பணி துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒருங்கிணைந்த மாற்று திறனாளிகளுக்கான தடையில்லா வளாகமாக சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தை அமைக்க ஒரு திட்டக்கருத்துரு உருவாக்கப்பட்டு

மைய அரசின் ‘‘சாமர்த்தியம்’’ என்ற திட்டத்தின் கீழ் 50 விழுக்காட்டுத் தொகையான ரூ. 219 இலட்சம் 2016–2017 ஆம் நிதியாண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணி பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தற்பொழுது செயல்பாட்டில் உள்ள திட்டப் பணிகள்**

**2.9** மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அரியலூரில் “புதை உயிரி படிவ கள” அருங்காட்சியகம் ரூ.2 கோடி செலவில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. 27.6.2014 அன்று மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு கட்டடம் கட்டும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-ன் கீழ், மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தோசராசனிக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாகவும், சென்னை மாநகரத்தின் அடையாளங்களுள் ஒன்றாகத்

திகழும் "தேசிய கலைக்கூடம்" கட்டடத்தினைப் பழுதுபார்த்து புதுப்பிப்பதற்கு ரூ. 11 கோடி அறிவித்தார்கள். இதற்கான பணிகள் நடைபெற்று அவை நிறைவடையும் தருவாயில் உள்ளன.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சியமைப்புடன் கூடிய சேமிப்பறையினை கட்டுவதற்கும், காட்சியமைக்கவும் ரூ. 1 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இதில் 2000 சதுர அடிப்பரப்பில் கட்டுமான பணிகள் பொதுப்பணித் துறையால் ரூ. 63 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.9.2015 அன்று காணொலி காட்சி வழியாக திறந்து வைக்கப்பட்டது. அக்கட்டடத்தில் நாணயவியல், பதக்கங்கள், அஞ்சல்தலை சேகரிப்புகளை காட்சிப்படுத்த மீதமுள்ள ரூ.37 இலட்சம் செலவில் புதிய காட்சிபெட்டிகள் அமைக்கப்பட்டு கருத்துசார் காட்சியமைப்புப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

**நடத்தப்பட்ட முக்கிய கல்விப் பணிகள் (2016–2017)**

**2.10 அரசு அருங்காட்சியகம், சென்னை**

1. சென்னை அரசு அருங்காட்சியத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் முக்கியமான ஒரு அரும்பொருள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையிலும், அறிவினை பரவலாக்கம் செய்யும் வகையிலும் பார்வையாளர்களுக்காக “வாரக் காட்சிப் பொருளாக” காட்சிப்படுத்தப்படுகிறது.

2. ராவ்பகதூர் வேமுரு ரங்கநாதன் செட்டி அறக்கட்டளை சொற்பொழிவு **30.8.2016** அன்று ‘‘தமிழ்நாட்டின் நகர வரலாறு – சில பரிமாணங்கள்’’ என்ற தலைப்பில் அருங்காட்சியக கலையரங்கில் நடைபெற்றது.

3. ஸ்ரீ நாராயண குருவையா செட்டி அறக்கட்டளை சொற்பொழிவு **17.10.2016** அன்று ‘‘காவிரி வடிநிலப் பகுதியில் முற்கால சோழர் கோயில்கள் – ஒரு வரலாற்று ஆய்வு” என்ற தலைப்பில் நூற்றாண்டு கண்காட்சிக்கூடத்தில் நடைபெற்றது.

4. சுற்றுலா அறக்கட்டளை சார்பில் **26.10.2016** அன்று “திருஇந்தளூர் செப்பேடுகள் – ஒரு கூர்ந்தாய்வு” என்ற தலைப்பில் நூற்றாண்டு கண்காட்சிக் கூடத்தில் நடைபெற்றது.

5. பேராசிரியர் பாலகிருஷ்ணன் நாயர் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு “தமிழக பாறை ஒவியங்களில் காணப்படும் தாவரங்கள் மற்றும் விலங்குகள்” என்ற தலைப்பில் **09.11.2016** அன்று நூற்றாண்டு கண்காட்சிக்கூடத்தில் நடைபெற்றன.

6. குழந்தைகள் தினத்தினை முன்னிட்டு **65** பள்ளிகளை சார்ந்த மழலையர் வகுப்பு முதல் **12** ஆம் வகுப்பு வரை பயிலும் **350** பள்ளி மாணவர்களுக்கு ஓவியப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவர்கள் வரைந்த ஒவியங்கள் **14.11.2016** அன்று நடைபெற்ற சிறப்புக் கண்காட்சியில் வைக்கப்பட்டன. வெற்றிபெற்ற **63** மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சென்னை நகரத்தின் பல்வேறு பள்ளிகளை சார்ந்த சுமார் **500** மாணவர்கள், விழா நிகழ்வுகளை கண்டு களித்தனர்.

7. ‘குடியம் குகைகள்’ என்ற தலைப்பில் சொற்பொழிவு **28.12.2016** அன்றும், “தமிழ் நாட்டில் சமணம்” என்ற தலைப்பில் சொற்பொழிவு **29.12.2016** அன்றும் ஆவணப்படத்துடன் நூற்றாண்டு கண்காட்சிக் கூடத்தில் நடத்தப்பட்டது.

8. அருங்காட்சியகங்கள் துறை மற்றும் தொல்லியல் துறை காப்பாட்சியர்கள் பயன்பெற ‘அருங்காட்சியக சேகரிப்பினை பாதுகாத்தல்’ என்ற தலைப்பில் ஆஸ்திரேலியே பாரம்பரிய மையத்துடன் இணைந்து ஒருநாள் கருத்தரங்கம் **6.1.2017** அன்று சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

9. பன்னாட்டு மகளிர் அறக்கட்டளை சொற்பொழிவு “இந்தியாவின் கணித வரலாறு பற்றிய

கண்ணோட்டங்கள்" என்ற தலைப்பில் 27.1.2017 அன்று அருங்காட்சியக கலையரங்கில் நடத்தப்பட்டது.

10. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பல்வேறு பிரிவுகளில் 16 கல்லூரிகளைச் சார்ந்த 276 மாணவர்களுக்கு உள்விளக்கப் பயிற்சி வழங்கப்பட்டது.

11. ‘‘பண்டைய இந்தியாவின் பங்குபத்திரங்கள்’’ என்ற சிறப்பு கருத்தியல் கண்காட்சி, இவ்வகையில் முதன்முறையாக சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 2.3.2017 முதல் 17.3.2017 வரை நடைபெற்றது.

**மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்**

1. சர்வதேச அருங்காட்சியக தினத்தை முன்னிட்டு "வன உயிரினங்களை பாதுகாப்போம்" என்ற தலைப்பில் சிறப்புப் புகைப்படக் கண்காட்சி கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில் 18.5.2016 முதல் 31.5.2016 வரை நடத்தப்பட்டது.

2. உலக சுற்றுச்சூழல் தின ஓவியப்போட்டி மற்றும் பரிசளிப்பு விழா விருதுநகர் அரசு அருங்காட்சியகத்தில் **3.6.2016** அன்று நடைபெற்றது.

3. பெங்களூரில் இந்திய தொல்லியல் துறை நடத்திய 'சிலை கடத்தல் தடுப்பு' தொடர்பான பயிலரங்கத்தில் கலந்துக்கொண்டு "செப்புப் படிமங்களை அதன் உடல் தோற்றத்தைக் கொண்டு எவ்வாறு அடையாளம் காண்பது" என்பது குறித்து படக் காட்சியுடன் கூடிய உரையை **21.6.2016** அன்று கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியர் வழங்கினார்.

4. சென்னை அரசு அருங்காட்சியக விலங்கியல் பிரிவுடன் இணைந்து கல்லூரி மாணவ, மாணவியருக்கு "விலங்கினங்களைப் பதப்படுத்துதல்" எனும் பயிற்சி சிவகங்கை அரசு அருங்காட்சியகத்தில் **28.7.2016** அன்று நடத்தப்பட்டது.

5. திருப்பத்தூர், தூயநெஞ்சக் கல்லூரியில் இந்திய வரலாற்று ஆய்வு கழகமும், தமிழக தொன்மையியல்

ஆய்வு மையமும் இணைந்து நடத்திய "தருமபுரி மாவட்டத் தொல்லியல் தடயங்கள்" என்ற கருத்தரங்கில் ஆய்வு கட்டுரையை கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் **30.7.2016** அன்று வழங்கினார்.

6. ''புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுக்கள்" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு புதுக்கோட்டை அரசு அருங்காட்சியக காப்பாட்சியரால் **30.08.2016** அன்று அரசு கலைக் கல்லூரி, வரலாற்றுத் துறை மாணவ–மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.

7. குறுகிய கால "கல்வெட்டு பயிற்சி" - **19.9.2016** முதல் **22.9.2016** வரை நான்கு நாட்கள் புதுக்கோட்டை அரசு மகளிர் கலை கல்லூரியின் முதுகலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவியர் **69** பேருக்கு புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் அளிக்கப்பட்டது.

8. உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு "தமிழகக் கோட்டைகள்" என்னும் தலைப்பில் புகைப்படக் கண்காட்சி பழனி அரசு அருங்காட்சியகத்தில் 27.9.2016 அன்று நடத்தப்பட்டது.

9. பழனி அரசு அருங்காட்சியகத்தில் 15.12.2016 அன்று நடைபெற்ற சிறப்பு கண்காட்சியில் 100–க்கு மேற்பட்ட நாடுகளின் பணத்தாள்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

10. "சிறு தானியங்கள் மற்றும் இயற்கை உணவுகளின் முக்கியத்துவம்" – சிறப்புக் கண்காட்சி 26.12.2016 அன்று கன்னியாகுமரி அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற்றது.

11. "கனிமங்கள்" – சிறப்பு கண்காட்சி கோயம்புத்தூர் அரசு அருங்காட்சியகத்தில் 27.12.2016 அன்று நடத்தப்பட்டது.

12. "கிராமப்புற இயற்கை காட்சிகள்" எனும் தலைப்பிலான தற்கால ஓவிய சிறப்பு கண்காட்சி மதுரை அரசு அருங்காட்சியகத்தில் 30.12.2016 முதல் 1.1.2017 வரை நடத்தப்பட்டது.

**13.** “விலங்கினங்களை பதப்படுத்தும் பயிற்சி”, திருச்சி அரசு அருங்காட்சியகத்தில் **3.1.2017** அன்று நடத்தப்பட்டது.

**14.** “மருத்துவத் தாவரங்கள்” கண்காட்சி உதகமண்டல அரசு அருங்காட்சியகத்தில் **4.1.2017** அன்று நடத்தப்பட்டது.

**15.** “மர உட்பதிப்பு ஓவியங்கள்” சிறப்பு கண்காட்சி **13.1.2017** அன்று மதுரை அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

**16.** உதகமண்டல ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினர் நடத்தும் மனிதநேய வார விழாவை முன்னிட்டு அருங்காட்சியகத்தின் சார்பாக நீலகிரி வாழ் பழங்குடியினரின் வாழ்வியல் பொருட்கள் மற்றும் நீலகிரி வாழ் உயிரினங்களைக் கொண்டு சிறப்பு கண்காட்சி **24.1.2017** அன்று உதகமண்டல அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

17. தேசிய சுற்றுலா தினத்தை முன்னிட்டு ‘‘சுற்றுலா தளங்களின் சிறப்பு புகைப்பட கண்காட்சி’’ 25.1.2017 முதல் 29.1.2017 வரை திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

18. ஒருவார கால, “மருத்துவ மூலிகைகள்’’ கண்காட்சியில் 81 வகையான மூலிகைகள் வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் 27.2.2017 அன்று முதல் காட்சிக்கு வைக்கப்பட்டன.

19. தேசிய அறிவியல் தினத்தினை முன்னிட்டு “இந்திய அறிவியல் அறிஞர்கள்’’ என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சி 28.2.2017 அன்று கோயம்புத்தூர் அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

20. “அறிவியல் கண்காட்சி’’ 30 பள்ளியைச் சேர்ந்த மாணவ மாணவியர்களால் வடிவமைக்கப்பட்ட 262 அறிவியல் மாதிரிகளுடன் 28.2.2017 அன்று பழனி அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற்றது. சிறந்த

அறிவியல் மாதிரிகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**21.** தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு “அறிவியல் அறிஞர்கள் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகள்” தொடர்பான ஓவியப்போட்டி ஈரோடு அரசு அருங்காட்சியகத்தில் **28.2.2017** அன்று நடத்தப்பட்டு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**22.** பூம்புகார் மற்றும் திருநெல்வேலி, தமிழக கைவினை வளர்ச்சி கழகம் இணைந்து நெல்லை மாவட்டத்தின் சிறந்த ஓவியர்களின் பல்வேறு வகையான ஓவியங்கள் மற்றும் கைவினை பொருட்களின் சிறப்பு கண்காட்சி **3.3.2017** அன்று திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தில் நடத்தியது.

**23.** “அண்மைகால புவியியல் காட்சிப்பொருட்கள்” என்ற சிறப்பு கண்காட்சி **8.3.2017** முதல் **23.3.2017** வரை கரூர் அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

**24.** மீனாட்சி பெண்கள் கலைக் கல்லூரியுடன் இணைந்து 'தொல்லெழுத்துக்கள் பயிலரங்கம்' **11.3.2017** அன்று மதுரை அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது. மேலும், பிராமி கல்வெட்டுகள் குறித்த சிறப்பு சொற்பொழிவும் காப்பாட்சியரால் வழங்கப்பட்டது.

**25.** உலக காடுகள் தினத்தை முன்னிட்டு **21.3.2017** அன்று "மருத்துவத் தாவரங்கள்" என்ற தலைப்பில் சிறப்பு புகைப்பட கண்காட்சி உதகமண்டல அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

**26.** "பழஞ்சுவடிகளை புதுப்பித்தலும், பாதுகாத்தலும்" என்ற தலைப்பில் சொற்பொழிவு **27.3.2017** அன்று நாகப்பட்டின அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

**27.** "தமிழக புராதன சின்னங்களின் புகைப்படக் கண்காட்சி" **27.3.2017** முதல் **30.3.2017** வரை சேலம் அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

28. “காலச்சுவட்டில் காணாமல் போனவைகள்” என்னும் தலைப்பில் கிராமபோன் சிறப்பு கண்காட்சி 27.3.2017 அன்று பழனி அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

29. உலக காடுகள் தினத்தை முன்னிட்டு 29.3.2017 அன்று “மருத்துவத் தாவரங்கள்” என்ற தலைப்பில் கண்காட்சி கோயம்புத்தூர் அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

**பிற துறைகளுக்கு வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் ஆலோசனைகள்**

**2.11** சென்னை அரசு அருங்காட்சியக வேதியியப் பாதுகாப்பு பிரிவு, சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர்களின் 31 ஒவியங்களை மீட்டுருவாக்கும் பணியினை செய்து முடித்துள்ளது.

**முடிவுரை**

**2.12** அருங்காட்சியகங்கள் கல்வி மற்றும் சுற்றுலா மையமாக செயல்படுகின்றன. ஆர்வமிக்க சுற்றுலா பயணிகளை அவை ஈர்க்கின்றன. ஒரு மாநகரத்தினையோ அல்லது சுற்றுலாத் தலத்தினையோ பார்வையிடுதல் என்பது அங்கு அமைந்துள்ள உள்ளூர் அருங்காட்சியகத்தை காணாமல் முழுமை பெறாது. பாரம்பரிய அறிவினை பாதுகாத்து எதிர் வரும் சந்ததியினருக்கு கொண்டு சேர்ப்பதில் அருங்காட்சியகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. குறிப்பாக பள்ளி மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் சிந்தனையை ஊக்குவித்து வடிவமைப்பதில் அருங்காட்சியகங்கள் பெரும் பங்காற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**கே.ஏ.செங்கோட்டையன்**
பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத் துறை அமைச்சர்